


# ஜீலை 22 - புனித மதலேன் மரியாள் (-84)

இவள் மக்தலா என்னும் ஊரைச் சேர்ந்தவள். அது கலிலேயா நாட்டிலுள்ளது. புனித லூக்காஸ் எழுதிய நற்செய்தியின் ஏழாம் அதிகாரத்தில் நாம் காணும் பாவியான பெண்ணும் லூக்காஸ் பத்தாம் அதிகாரம், அருளப்பர் பதினோராம் அதிகாரம் இங்கு நாம் காணும் மார்த்தாள் லாசர் இவர்களுடைய சகோதரியும் இவளே. ஏழு பேய்களை இவளிடமிருந்து இயேசு விரட்டிய பின் (லூக்காஸ் 8:2) இவள் வேறு பல புண்ணிய பெண்களோடு இயேசுவைப் பின்சென்று அவருக்கு சேவை செய்தாள். உடைமைகளைப் பயன்படுத்தி அவருக்குக் சேவை செய்தாள். சாகும்வரை அவருக்குப் பிரமாணிக்கமாய் இருந்தாள். இயேசு தொங்கிய சிலுவையின் அடியில் இவள் நின்றாள். உயிர்த்த இயேசு தம் அன்னைக்கு முதலில் காட்சி கொடுத்தார். அடுத்த படியாக காட்சி கொடுத்தது இவளுக்கே. உயிர்த்த இயேசுவைக் காணும்வரை இவள் இளைப்பாறவில்லை. “அவரை எங்கே வைத்திருக்கிறீர்கள்? நான் அவரைத் தூக்கிக் கொண்டு செல்வேன” என்றாள். அவரைத் துாக்கிச் செல்ல இவளால் முடியாது. என்றாலும் இச்சொற்கள் இவளது அன்பைக் காட்டுகின்றன இவளை யூதர்கள் நாடு கடத்தினார்கள். மார்த்தாள், லாசர் இன்னும் சில சீடர்களுடன் இவள் பிரான்ஸ் நாட்டை அடைந்தாள் என பரம்பரை கூறுகிறது.

**சிந்தனை:** பாவமான இன்ப சகங்களை நேசித்த இப்புனிதரை மனந்திரும்பி பின், இயேசுவை ஆர்வத்துடன் பின்பற்றினார். நாமும் பாவிகளாயிருந்து மனம் திரும்பியிருக்கிறோம். இவளைப்போல் இயேசுவை நேசிப்போம்.

**செபம்:** ஆண்டவரே, உமது பேரிரக்கத்தால் இன்னும் உயிருடன் இருக்கும் நாங்கள் உமக்கு அதிக ஆர்வத்துடன் சேவை செய்ய வரம் தாரும்.